


# திறவுகோல்

2056
கார்த்திகை
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# கூட்டத்திலே கோயில் புறா

உன்னைத்தவிர மற்றவர்களைப் பார்ப்பது தானே காதலின் விதி.

இளவயது அவ்வைக்கு உன் சாயல். சுட்ட பழம் வேண்டுமா கேட்ட சிறு குமரன் நானல்லவா. இப்பொன்னாளின் பொற்காலையில் நற்செய்தி எதுவெனில் கூட்டத்திலே கோயில் புறா மாதிரி... அரங்கத்திலே நீ தமிழ் மாலை.

என் தாடிக்குள் இருக்கும் தேவ சொற்களை கண்டெடுத்து கவிதையாக்க தெரிந்த காவியச் சுவடி நீ. உன் கன்னங்களில் ஒளிந்திருக்கும் வெட்கத்தை கிள்ளிப்பார்க்கும் ஓவிய தூரிகை நான். என் கண்களை சந்திக்க வந்ததாக சொல்லி இருந்தாய். நான் உன் உள்ளங்கை திறக்க வந்திருந்தேன். அதில் நெல்லிக்கனி என் நினைப்பு நிஜமா. சோதிக்க அல்ல. கொஞ்சம் சொக்கவும்... மறுமொழிக்கு கொஞ்சம் திக்கவும்.

தாமதமாக வரும் பறவைக்குத் தானே கூடு காத்திருக்கும். உன் வருகைக்கு வேண்டுமானால் நேரம் கூடலாம். உன் இருப்புக்கு காலம் போதாது.

இரண்டு முறையும் திரும்பி பார்த்ததை கணக்கு வைத்திருக்கிறாய். மூன்றாம் முறை திரும்பி பார்த்த நினைப்பை அறியாயோ கள்ளி. பார்த்ததும் யாரும் அறியாமல் தாவி அணைக்க எங்கு கற்றாய். காற்றிடமா. கவிஜி கவிதையிடமா. மலை வானமேறியது இருக்கட்டும். தோளில் அமர்ந்திருந்த பட்டாம்பூச்சி ஒன்று யானை கனத்தில் எப்படி.

பழைய முகங்கள்தான் நமக்கு. ஆனால் பழகிய முகங்கள். உணர்ந்தாய்தானே. நொடிக்கு மொழி கூடும் எனக்கு உன் விழிக்கு சாட்ட ஒரு சொல் இல்லையே. யார் யாரோ என்னென்னவோ பேசினார்கள். நீ என்னை மட்டும் தானே பேசினாய். உன் பேச்சு மொழிக்குறிப்புகளால் ஆனது அல்ல. அது ஆதி ஒலிக் குறிப்புகளின் தூதுமடல்.

வெட்கத்தில் சிவக்க கற்ற உன்னிடம் நெற்றி முட்டி என் நிறம் மூட்ட நினைத்தேன். வெட்கம் தாங்காமல் நன்றிகள் என சொல்லி விடுவாயோ என்று தான்... நுட்பம் மூச்சேற மெல்ல சிரித்தேன். குதித்தோடி மேடையேறும் வழக்கம்தான். உனைக் கண்ட துள்ளல் கள்ளம் பாவித்தது. ரகசிய பார்வைக்கு றெக்கையைத் தந்ததால்... அவசிய பார்வைக்கு அணில் தாவல் மறந்தது.

யார் என் பெயர் சொன்னால் என்ன. நீ மௌனிக்கும் அதன் பொருளுள் தானே அதன்

விஸ்தீரம். என் அத்தனை பதில்களையும் முழுங்கிவிட்ட ஒற்றைக் கேள்வி நீ. இந்த மெல்லிய மழையில் முகம் முழுக்க வியர்க்க உனக்குத் தானே தெரியும். கரம் குலுக்கி பழக்கமில்லாத காதல்தான் தோள் கொடுக்கவும் தயாராகும். காதலின் மொழி அது. கண்டாயோ தோழி நீ.

கரங்களைக் கட்டி ஏன் அமர்ந்திருந்தேன் தெரியுமா. உன்னிடம் ஓடி வர குதிக்கும் இதயத்தை கட்டி வைக்க வேறு வழி இல்லை.

மற்றவர்களுக்கு நான் பேசும் சொற்கள். உனக்கு நான் பேசா அதன் இடைவெளி.

சூழ்ந்தவர்கள் விலகி விடுவது... யாவரும் அறிந்தது. தனித்திருந்தும் நீ சூழ்ந்து கொள்வது நானறிந்த ரகசியம். என்னைப் பிடித்தவர்கள் அழகாய் மட்டுமல்ல... ஆலாபனை கொண்டவராகவும்... கூடவே அதிரூபம் கொண்டவராகவும் இருப்பார்கள். சந்தேகமெனில் கண்ணாடியில் பார். உறுதிப்படுத்திக் கொள்ள முன்னாடி வந்து என் கண்களில் பார்.

கவிதை அரங்கேற்றம் உணர்வியல் சார்ந்தது. நம் கண்கள் அரங்கேற்றம் உள்ளவியல் சார்ந்தது.

பெரும்பசிக்கு போதுமான கவளம் தாண்டி உன் சிறு உச்சரிப்புக்கு தோகை விரிக்கும் என் பெயர். நீ வெளியே சொன்னதை விட மனதுக்குள் சொல்லிய போதெல்லாம் குதியாட்டம் அதன் வேரில். நமக்கென்ன அறிமுகம் வேண்டி கிடக்கிறது. ஆதி தொட்டு அசரீரியாய் கேட்டுக்கொண்டே இருக்கும் நாம் தானே நாம்.

புகழைத் தள்ளி அறிவைத் தேடும் சூட்சுமம் சொல்லித் தரவா. என் புருவத்தின் நடுவே முத்தமிட்ட உன் மூக்குத்தி ஒளியை அள்ளித் தருவாயா. என்னிடம் மின்னல் மொழி கண்டாயோ. மிரட்சியில் கிசுகிசுத்த உன்னிடம் கன்னல் மொழி உணர்ந்தேன் கண்ணம்மா. பிரிய பிரிய சேரும் பாக்கியம் காதலுக்கு உண்டு. ரயில் பிரித்த நம்மை உடனே வாட்சப் இணைத்தது இல்லையா.

வீடு வரை வந்து விட்டு போ... தெரியும் வந்தால் விட்டு போக முடியாது உன்னால். கட்டுடைப்பாய்... காதல் வெடிப்பாய். ஆதலால் தூரத்து டாட்டா துக்கத்தில் மியூட்டா. கோவை தமிழ் மட்டுமா நான். உன் ஊர் தமிழும் தான் நான். இந்த முறை கனவில் கேள். அடுத்த முறை காதில் பேசுகிறேன்.

உனக்கும் எனக்கும் இடையே கோடி யுக இருளும்... அதே யுக நட்சத்திரங்களும் உண்டு. கண்டு கொண்ட காலம் காய்த்து தொங்குகிறது. பின்னிரவு வானம் பார். தன்னிறைவு தூது

நிலாவில்.

என்னை சந்திக்க வந்தது உண்மையில் நீ இல்லை தான். உவமையாய் சொல்வதானாலும் தீண்டுமின்பம் தோன்றச் செய்த உயிர்த்தீ.

—

கவிஜி

---

# நினைவின் நிழல்

சுதியில்லா இசை போல்,

சுவையில்லா தேன் போல்,

நீரில்லா நதி போல்,

மழையில்லா மண் போல்,

காற்றில்லா உலகம் போல்,

நிறமில்லா வண்ணம் போல்,

ஒளியில்லா தீபம் போல்,

நீயில்லா நான்..

## மண்ணைத் தொடும் மழை

மண்ணைத் தொடும் மழையே! நீ
என்னை நனைக்க வாராயோ..

விண்ணைப் பிளக்கும் இடியே! நீ
மின்னைப் பாய்த்துப் போறாயோ..

பெண்ணையில் மிதக்கும் படகே! நீ
என்னை ஏற்றிச் சொல்வாயோ..

பொன்னைத் தேடும் மனமே! நீ
தன்னை மறந்து போறாயோ..

பண்ணை இசைக்கும் தமிழே!நீ
அன்னை வாழ்த்தி பாடாயோ..

கண்ணைத் திறக்கும் இறையே! நீ
என்னை ஒருகணம் பாராயோ..

—

மன்னை
ராம்குமார் பாஸ்கரன்
சென்னை.
+91 900 339 9195



# நதியில் குளிக்கும் மழை

பிடித்த மழை விடவேயில்லை
பிடித்த மழை ஏன் விட வேண்டும்?
என்கிறேன்.

மழைக்கு குடை பிடிக்காது
ஆதலால்
மழைக்கு குடை பிடிக்காதே

மழை குடி
மழை நனை
மழை அனுபவி

தீண்டாமை பாவச்செயல்
தீண்டிவிடு மழை அது நற்செயல்

மழைக்கு முன் மின்னல் நரம்புகள்
மழை தொட நரம்புகளில் மின்னல்

மழையில் குளிக்கும் வெயில் பார்
நதியில் குளிக்கும் மழை பாடு

கையில் சிக்காத மழை
மனதில் சிக்கும் ஈரம்

நெளியாமல் உடையும்
மழைக்கம்பி
தெளியாமல் வளை தூவும்
நதிமீது துள்ளி

மேகத்தில் முதலில் பதிவிறக்கம்



பின்னர் மழையை வானம்
தரையிறக்கும்

கடல் குழவிகளாம்
துளிகள் ஒவ்வொன்றும்
தரையில் விழுந்து
தவழும் ஊர்ந்து

மழையில் சேர்ந்து
நனைந்து கரைந்து
விரைந்து அளைந்து
அருந்து விருந்து

மழைவாசல் புகுந்து
மழைச்சுவையறிந்து
மண் வாசம் நுகர்ந்து
மனதில் பேரின்பம் மகிழ்ந்து

கண்ணீரால் அல்ல,
மழைநீரில் கரையும் துயரம்
ஆதலால் மனிதா
மழைத்துளிகளை
ஆக்காதே விரயம்!!

## நலமே இப்போது!

மனிதனிடம் போனேன்
மனித நேயம் இல்லை
முகநூலிடம் வந்தேன்
முகங்களே தெரியவில்லை
புலனத்திடம் சென்றேன்
புலனுணர்திறன் அங்கில்லை
வலையொளி ஏகினேன்
வலைக்குள்ளகப்பட்டுத் தவித்தேன்
அளாவியிடம் அணுகினேன்

அல்லல் அனுபவித்தேன்
கீச்சகம் நோக்கினேன்
காதுகள் பொத்தினேன்
காயலையில் கலந்தேன்
நோயலையில் வீழ்ந்தேன்
பற்றியம் தொற்றினேன்
பற்றற்ற நிலை கண்டேன்
படவரி போய்ப் பார்த்தேன்
உயிரற்ற படமாகினேன்
ஈற்றிலே அனைத்தையும் விட்டேன்
என்னிடம் திரும்பி விட்டேன்

நானும் என் மௌனமும்
நலமே இப்போது...

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

---

# வாழ்வெலாம் அன்பிலே!

பாவகை: பண்ணத்தி

## எடுப்பு

வாழ்க்கையில் செழித்திடுவோம் -
கடனிலா
வாழ்வினை வாழ்ந்திடுவோம்!

## தொடுப்பு

வாழ்க்கையும் அழியுமே வலுவிலா
துணையிலே
வாழ்ந்திட வேண்டுமே வாழ்வெலாம்
அன்பிலே!
(வாழ்க்கையில்)

## முடிப்பு

வாழ்க்கையை வாழ்ந்திட வாகையும்
சூடுமே;
வானமும் பண்பினை வாஞ்சையாய்ப்
போற்றுமே!

வாழ்வினில் ஒழுக்கமே வாழ்ந்திட
ஏற்றுமே;
வாழ்க்கையின் நெறியுமே வாழ்வினை
மாற்றுமே!

(வாழ்க்கையில்)

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# மழையும்... மலை சாய்ந்த வாழ்வும்!

குடியரசு தலைவர் சாமி கும்பிடப்
போகுமிடத்தில்
வானூர்தி இறங்குதளம்
அமைக்கிறார்கள் உடனடியாக!

பிரதமர் பயணிக்க
எப்போதும்
தயாராக இருக்கிறது
தனி விமானம்!

முதலமைச்சர்கள்
மேடைக்கு வந்திறங்கும் இடம் வரை
முதல் நாளே போட்டுவிடுகிறார்கள்
சாலைகள்!

கட்சிகளின்
மாநாட்டில் கோட்டையின் முகப்பை
ஒத்து போடப்படுகின்றன பிரம்மாண்டப்
பந்தல்கள்!

அமைச்சரின்
கார் நழையாமல் இருக்க இருக்கிறது
கொட்டகை!

கேரவேனில் பயணிக்கின்றன
சிலரின் மாடுகள்!

நவீன வசதிகளுடன்
பேருந்தில் வருகிறார்கள்
தலைவர்கள்...

தார்ப்பாய் போர்த்தி
பாதுகாப்பாக
வந்திறங்குகிறது
மதுபானக்கடை சரக்கு வாகனம்!

மழையில் நனைந்து
முளைத்துக்கிடக்கின்றன
நெல்மூட்டைகள்
கொள்முதல் நிலையங்களில்!

—

நேசன் மகதி

# அரூபமாதல்

எழுதாத சொற்களுக்குள்
பிரவேசிக்கிறாய்
எழுத சொல்லி நீயே வஞ்சிக்கிறாய்
எழுதாது போனால் தண்டிக்கிறாய்
எழுதி தந்ததும் துஞ்சிக்கிறாய்

மனவெளியில் தேடி சலித்துப்
போனேன்
கால மூச்சாய் எங்கும்
நிறைந்திருக்கிறாய்
இனி எங்கனம் தேடியலைவது
தூரத்து வெளியில்
ஓர் அரூபமாய் ஒளிர்கிறாய் ...

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்

# துளிப்பாக்கள்

கடலில் முளைத்த
சாலையோர கடைகள்
மழையில் மிதக்கிறது.

இறங்கி வந்த காற்று
மரத்தின் பின் ஒடி ஒழிகிறது
சருகுகள்

ஓராயிரம் முறை தொடும் அலைகள்
சிணுங்கி வெட்கப்படுகிறது
கரைகள்

புத்தகங்களை
புரட்டிய காற்று
தேர்வுக்கு தயாராகிறதோ ?

சிணுங்கும் சில்லறைகள்
பூட்டி வைக்கப்பட்டுள்ளன
உண்டியல்

நீர்சுரந்தன புத்தகம்
படிக்கிறான் வலியோடு
அம்மாவின் சுமைகள்

வெட்டுண்ட உடல்
அழுது பார்க்கிறது
வற்றிய குளம்

தாகம் தீரவில்லை
அன்னாந்து பார்க்கிறது
வற்றிய குளம்

அடையாளமில்லா பிணம்
அடையாளம் காட்டுகிறது
குலைக்கும் நாய்

ஆள் அரவமற்ற வீடு
கதவில்லா சன்னல்
குடிபுகுந்த சூரியன்

ஒற்றைச் சொல்
உயிரினும் மேலானது
அம்மா

தாலாட்டு கேட்கிறது
கண்ணயர்ந்து உறங்கினான்
காற்றிலாடும் அம்மாவின் சீலை

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# பாடம்

முட்களைக் கொண்டு
கூடு கட்டி குடிகொண்டிருக்கும்
பறவைகள் சொல்ல வருவது
கடினமாக வாழ்க்கையில்
மகிழ்ச்சியாக இருக்க
கற்றுக் கொள்ளுங்கள்
என்பதை தான்..

—

இரா. மதிராஜ், DME, MBA,,
காங்கேயம்.

# ஒற்றைச் சொல்லில்

வணங்கி நிற்கிறேன்
பார்க்கும் போதெல்லாம் பணிகிறேன்
எழுதும் கதைகளில் இளைப்பாறுகிறேன்
அலைபேசிகளில்
அன்பை தரிசிக்கிறேன் உண்ணும்
வகைகளில்
உப்பைக் கூட்டுகிறேன்
இன்னும் கரையாமல் என்னுள்ளோடும்
பேரன்பு நதியை
நீயும் உணர்கிறாய்தானே.

## அப்படியே விட்டு விடுங்கள் வானத்தில்

நட்சத்திரம் என உலவுகிறேன்.
ஒளி வீசும் சூரியனைப் போல எரிந்து
கொள்கிறேன்.

ஈர்ப்பு விசை கொண்டு அண்டத்தில்
சுற்றி நிலைக்கிறேன்.

கிரகத்தின் சுழற்சிகளுக்குள் சிறு துகளாய்
மிதந்து செல்கிறேன்.

கவிதை எழுதி கனவில் மிதக்கவும்
காவியம் படைத்து
காசினைப் போற்றுவோம் இழிவை
எதிர்த்து
இன்னலில் நனையவும் திரிந்தவனை
மீண்டும் இழுத்துவிட்டு வேடிக்கை
பார்க்காதீர் பூமியில்.

உருவத்தை மாட்டி
உறக்கத்தைத் தொலைப்பதை விட
அரூபத்தில் ஒளிந்தபடி
அமைதி கொள்கிறேன்.

## வலசைப் பாதைகளில்

வளைய வரும்
வானப்பரப்பில்
வருத்தங்கள் இடைநிறுத்துவதில்லை.

வரும் காலம் அச்சுறுத்துவதில்லை.
சந்ததிகளின் பாதைகளை
சரி செய்ய யோசிக்கும் தருணங்கள்
இல்லை.

அறிவின் ஏணியில்
உச்சத்தில் இருக்கும்
நம்மைப் போல....

## இருப்பதன்

எல்லா நிலைகளிலும்
பறந்து பார்க்கிறது
மனப் பறவை.

இருப்பிடம் என நில்லாது போக்கிடமற்ற
பறவையின் சிறகைப் போலன்றி
அடிக்கடி வீடடைந்து
சுருக்கிக் கொள்கிறது
வானப் பரப்பை.

## எப்போதும் போல

பலியாக முயன்றும்
பலி கேட்க ஏங்கியும் பலிபீடத்தில்
அமர்ந்து வேடிக்கை பார்த்தபடியும்
நகர்ந்திடப் பார்க்கிறது வாழ்வின் ஓயாத
கனவுகள்.

## பதட்டத்தில் பரிதவித்து

சிதறிய எழுத்துக்களை சேகரிக்கும்
இலைகள் அர்த்தத்தின் கனம் தாளாது
உதிரத் தொடங்குகின்றன வானத்தை
தாங்கியபடி
பூமியில் மோதும்
இலையின் மேனியில்
கவிதை அமைத்த பெருமிதத்தில்
உறங்குகின்றன சொற்கள்.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# கார்த்திகை மாதம்

செவிகளை நிரப்பும் சரண கோசம்

உள்ளத்தில் எழும் பக்தி மயம்

கூதல் காற்றில் நடுங்கும் நரைகள்

நிரம்பிக் கொண்டிருக்கும் குளங்களில்
நாரைகள்

சமைந்த பேரழகியாய் செங்காந்தள்
மலர்கள்

தேவாலய வீதிகளில்
தேர்வடமாய் நட்சத்திரங்கள்

வடக்கும் தெற்குமாய்
வட்டமிடும் பட்டாம்பூச்சிகள்

நெஞ்சில் நம்பிக்கையோடு பறக்கும்
ஈசல்கள்

ஈரமண்ணில் பட்டாடையுடுத்தி
பவனிவரும் பாப்பாத்திபூச்சிகள்

தண்டவாளம் தவறி ஊருக்குள்
இரயில்பூச்சிகள்

புகையிரதமாய் தாணியம் சேகரிக்கும்
சிற்றெறும்புகள்

சிற்றுயிர்கள் காதல் கொள்ளும் காலம்

அந்தி நெருங்க
சில்வண்டுகளின் ஓலம்

திறந்தவெளி சொர்க்கத்தில் இணையும்
தும்பிகள்

கருமேகத்துனூடே எப்போதாவது
சிரிக்கும் நிலா

மறந்தும் மறவாமலும் கனவுகள் உலா

புல் பூண்டுகளின் நுனியில்
மழைத்துளிகள்

தவறாமல் உருவாகும்

புயல் சின்னம்

அவ்வப்போது முகத்தில் பூமழை பொழியும்

எப்போதாவது அணைக்கட்டும் நிரம்பி வழியும்

அழகியலுடன் பேராபத்தையும்
அவிழ்க்கும் மாதம்

—

கவிஞர் லா. பெனிஸ்,
நெல்லை.

---

# பிடி தானியத்தை இன்னும் இறைக்கவேயில்லை தயார் நிலையில் தான் வைத்திருக்கிறேன்...

ஓடோடி வருகின்றன
பக்கத்து வீட்டுக்
கோழிக் குஞ்சுகளின்
நம்பகங்கள்..!

நானும் அப்படித்தான்
ஓடி வருகிறேன்
எதை கையளிக்கப் போகிறீர்கள்?
பிடி அன்பு போதுமெனக்கு

*****

கண்ணாடி நீர்த்தொட்டிக்குள்
கால்களை விட்டதும்
அழுக்குகளை உணவாக்கி
அப்புறப்படுத்துகிற மீன்களுக்கு...

பிள்ளை எத்தனை
அழுக்காய் இருந்தாலும்
நேசத்தோடு சுத்தப்படுத்துகிற
பெற்றோர்களின் சாயல்

*****

நட்சத்திரங்களோ நிலவோ
இல்லாத இரவு வானத்தைப்
பார்க்கிறேன்...

கடனே இல்லாத
அப்பாவைப் போல்
அது நிம்மதியாய் இருக்கிறது...

—

பி. ஹேமா,
முசிறி

# தீபாவளிப் பண்டிகை

சனி ஞாயிறோடு
செவ்வாயும் சேர்த்து
திங்கட்கிழமை
தீபாவளி கொண்டாட
அறிவிக்கப்பட்டது
நான்கு நாள்கள் விடுமுறை

கூட்டம் வழியும்
பேருந்துகளில்
சட்டைப்பையிலிருந்து
மொத்தமாக திருடியது
உயர்த்தப்பட்ட கட்டணங்கள்

அடித்துப் பிடித்து
சென்ற பயணத்தில்
முதலாவதாக
கட்டித் தழுவி அரவணைத்து
வரவேற்றது
எல்லையில்
தென்றல் காற்று

இருக்கும்
நான்கைந்து பற்களை
பல நாள்களுக்குப் பிறகு காட்டி
புன்னகைப் பூக்களால்
வரவேற்பு தந்தாள்
அம்மா

கண்மாய்களும்
கழனிகளும்
உருவம் மாறிப் போன
பால்ய வயது நண்பர்களும்
அன்பை அள்ளிக் கொட்டும்
அண்டை வீட்டு சொந்தங்களும்

மாறி மாறி
நலம் விசாரித்ததில்
பறந்து ஓடின
பல நாள் வலிகள்

பண்டிகை கால
வெளியான படங்களும்
கோயில் குளங்களும்
பட்டாசுகளும்
விளையாட்டுகளும்
பங்கு போட்டுக் கொண்டன
நான்கு நாள்களை

அலுவலக இறுக்கங்கள்
மறந்து போக...
மகிழ்ச்சியோடு
ஊரை விட்டு
கிளம்புகையில்
இன்னும் கொஞ்சம் நாள்கள்
இருக்கக் கூடாதா என
மனதுக்குள் பேசி
கண்ணீர் விடுகிறாள்
அம்மா

பிள்ளைகளைப்
பிரிந்திருக்கும்
அம்மாக்களுக்கு மட்டும்
வருவதே இல்லை
உண்மையான தீபாவளி!

—



சா.கா. பாரதி ராஜா,
பிளாட் எண்1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# மனிதம் திற மனிதா



இப்போதெல்லாம்
தெருவில்
இறங்கி
நடந்தாலே
எதிரே
வருவது
மனித மிருகமா
அல்லது
மிருக மனிதனா
என்று
கணிக்க
இயலவில்லை.

எந்தப் பாதையில்
வருகின்றான்
என்பதைக்
கணித்த காலம் போய்
எந்த
போதையில்
வருகிறான்
என்று
கணிக்க
முடியவில்லை.

மனிதன்
ஆக்கிரமித்த
இடங்கள் தவிர
மற்ற இடங்களை
நாய்களும்
மாடுகளும்
போட்டி போட்டு
பட்டா
வாங்கிவிட்டன.

சைவப்
புல் தின்று
அசைவப்பசி
ஆற்றிய
ஆடு மாடுகள்
எல்லாம்
சுவரில்
ஒட்டிய தாள்களையும்
குப்பையில்
எறியப்பட்ட
மிச்ச மீதிகளையும்
தின்று
தீர்க்கின்றன.

மனிதர்களுக்கு
மத்தியில்
மிருகம்
வாழ்ந்த
காலம் போய்
மிருகங்களுக்கு
மத்தியில்
மனிதன்
வாழ்கிறான்.

முன்பெல்லாம்
குப்பை கொட்டுவதற்கென்று
தனியிடம்
இருந்தது
இப்போதெல்லாம்
பார்க்கும்
இடத்திலெல்லாம்
குப்பைகள்
கொட்ட உரிமை
பெற்று விட்டான்
குப்பை அள்ளுவதற்கென

தனிவரி
செலுத்தி.

அது சரி
நடுத்தெருக்களை விட
சிறந்த
குப்பைத்தொட்டி
வேறு ஏது?

குப்பையோடு
குப்பையாக
வாழுகின்ற
மனிதனுக்கு
மனமும்
குப்பையாகிவிட்டதுதான்
இப்போதைய
சாதனை.

பசுமைக்
காடுகளுக்கு
மத்தியில்
இயற்கையோடு
வசித்த
மனிதன்
கான்கிரீட்
காடுகளுக்கு
மத்தியில்
செயற்கையாய்
சுவாசிக்கிறான்.

அன்று
மனிதத்திற்கு
மத்தியில்
மனிதனைத்
தேடினோம்
இன்று
மனிதர்களுக்கு
மத்தியில்
மனிதத்தைத்
தேடுகிறோம்.

—

சி. பிரபாகரன்,
9865272579,
257/117, மேட்டுத்தெரு,
ஸ்ரீராம் பிளாட்ஸ்,
செங்கல்பட்டு.



ஓவியம்: மா. நிரல்யா,
இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# நூபுர கோபுரம்

கோபுர உச்சிக் கலசத்து
நெல்மணிகள்
உன் பாதத்து நூபுர
அணிமணிகள்
மற்றதெல்லாம்
அப்புறத்தில் அப்புறம்
திரிபுரசுந்தரி

அருகில் அண்ணாந்து
பார்க்கும் கோபுரத்தை
தூரத்தில் இயல்பாகவே பார்க்கலாம்

பக்கத்தில் பார்க்கும் போது கிடைக்கும்
பிரம்மாண்டத்தை
தூரம் அபாண்டமாக
மறைத்து விடுகிறது

பாண்டத்தில் பண்டமாக
உன் பனித்த ஜடையில்
இனித்தமுடன் நீ சூடுகிறாய்
மலரொன்றை

குனித்தல் இல்லாத
கோபுரத்து வாயிலொன்றில்
குனுகும் கோயில் புறா
உனது மென்றோளையன்றி
மனித்த பிறவியையா வேண்டும் இந்த
மாநிலத்தில்!

—

## மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி.

---

# ஒற்றைப் பந்தல் ஆகாயம்

உள்ளமெனும் நதியில்
ஆசைதீர நீந்திக் களிக்கிறது
என்னவளின் நினைவுகள்.

## இளமையில் கல்

வறுமையை வெல்
செல்வத்தில் நில்
முதுமையில் சொல்

## என்னை எப்போது

விடுவிப்பாயென்று சொல்?
அப்போது
எனக்கு விருப்பமானவளிடம்
தஞ்சமடைந்து கொள்கிறேன்.

## வழக்கம் போல்

அவளின் முகக் குளத்தில்
இரண்டு மீன்கள்
எப்போதும் போல்
தூண்டிலோடு இருக்கின்றேன்
நான்.

## நான் பார்க்க போயிருக்கிறேன்.

கதிரவனைப் பார்த்துக்
கொண்டிருக்கிறது
கவிஞன் திமிரில் சூரியகாந்தி.

## பூவின் முகத்தில்

அழகிய பனித்துளிகள்.
தென்றலின் அசைவுக்குப் பின்
பலதுளிகள் ஒருதுளியானது.

## சட்டைப் போட்டுக் கொண்ட

சேவல்; கைகளைப் பின்னால்
கட்டியபடி கம்பீரமாய்த் திரிகிறது.
ஆண்மகன் தோரணையில்...!

## கனவில் நான்வரும்

நேரம் பார்த்து
போர்வையை இழுத்து
மூடிக்கொள்கிறாள்
எதுவும் புலப்படவில்லை
இருட்டில்.

## அண்டம்

அனைத்திற்கும்
ஒற்றைப் பந்தல் ஆகாயம்.

## மௌனமாய்க் கொடுத்த

முத்தத்திலும்; அதிகமாக
கேட்கிறது சத்தம்.



## எவ்வளவு தான்

முன்னெச்சரிக்கையுடன்
இருந்தாலும்
காரியத்தில் கணக்காய்
இருக்கிறது காலம்.

## நிலா பார்க்க

நினைத்த நாளில்
வானமில்லை.
வானம் பார்க்க
விழைந்த நாளில்
நிலவில்லை.
இவை இரண்டும்
அமைந்த நாளில்
நான் என்னிடமில்லை.

## மண்மட்டுமே அறியும்

மழையின்
ரகசியத்தை...

## வானம் அழுவதால்

மாசு களைந்து
மகிழ்ச்சியடைகிறது பூமி.
எனதழுகை உன்னை
மகிழ்விக்குமேயானால்
என்னாயுள் முழுவதும்
அழுது கொண்டிருப்பேன்
உனக்காக...!

—

பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# கண்ணீர்

வேண்டுவன
கிடைக்க
மழலையரின்
முதல் ஆயுதம்

அன்னியரை
விரட்டும்
விழியின் இராணுவம்

மனதின் வேதனையை
குறைக்க
மானுடனின்
ஒரு வழி

காரியம்
சாதிக்க
மகளிரின்
கடைசி ஆயுதம்

## தொடரும்

பயணத்தின் போது
கூட்டமாய் இருந்தாலும்
வசதியாய் நிற்க இடம்

அடுத்ததாய்
அமர இருக்கை

அதற்கடுத்து
முன் வரிசை இருக்கை

பிறகு
பக்கத்து இருக்கையில்
இருப்பவர் சாயும்
தொல்லையின்மை

என வாழ்க்கைப்பயணம்
போல் தொடரும் எதிர்பார்ப்புகள்

## வந்தததும் வருவதும்

நேரத்திற்கு
உண்ணாததால்
பசி
விளைவாய் தலைவலி

கடும் பணிச்சுமையால்
மன அழுத்தம்
விளைவாய்
கோபம்

சிறப்பான செயல்பாட்டால்
பாராட்டு
விளைவாய்
தன்னம்பிக்கை

தொடர்ந்த வாசிப்பால்
விடயம் அறிதல்
விளைவாய்
ஆழ்ந்த யோசிப்பு

## இரண்டில் ஒன்று

உரிய மதிப்பும், மரியாதையும்
கிடைக்க வேண்டும் எனில்

ஒன்று
சக மனிதர்க்கு
அப்படி எண்ணம்
இருக்க வைண்டும்

இல்லேயெனில்
நம்மை மதிக்க வேண்டும்
வேண்டிய நிர்ப்பந்தம்
சக மனிதர்க்கு இருக்க வேண்டும்....

## எது வரை?

படுக்கையில் புரள்தல்
உறக்கம் வரும் வரை

கடை கடையாய்
அலைதல் மனையாளுக்கு
திருப்தி கிடைக்கும் வரை

மருந்துகளோடு சகவாசம்
நோய் உடலை விட்டு
வெளியேறும் வரை

பிறரை புகழ்ந்து கொண்டே இருத்தல்
தனக்கு காரியம் ஆகும் வரை

கடின உழைப்பும், முயற்சியும்
இலக்கை அடையும் வரை...

## மூன்றாய் மனிதனாய்

பிரிவு என்றால்
வருத்தம் தான்

தோல்வி என்றால்
மன வேதனை தான்

இந்த பணி தானே
எளிமையானது

என்று நிகழ்வுகளிலிருந்து
விலகி மூன்றாய் மனிதனாய்
எளிதாய் எல்லோருமே
சொல்லலாம்

ஆனால் அவை
தனக்கு சம்பவிக்கும் போது தான்
அதன் ஆழத்தை
உணர முடியும்...

## வார்த்தை சாமரத்தில்

இது என்னால் முடியுமா
என்ற கலக்க பகிர்வில்

உன்னிடம்

நிறைய விடயம்
உள்ளது

கடின உழைப்பு
இருக்கிறது

சாதித்த அனுபவம்
உள்ளது

விடா முயற்சி
இருக்கிறது

கிடைத்தே ஆக வேண்டும்
என உத்வேகம் உள்ளது

என
வார்த்தை சாமரம்
வீசினால்

மனம் குளிர்ந்து
நம்பிக்கை ஊற்றெடுக்கும்

என்ன ஒன்று
சொல்பவர்
காரியத்துக்காய்
இல்லாமால்
உண்மையை
உதட்டு மொழியாக்க
வேண்டும்

## கொஞ்ச நேரத்தில்...

கடின
காரியம்
என்ற
எண்ணத்திலும்

சரியாய்
அமைய வேண்டும்
என்ற பயத்திலும்

இருந்த நிலையில்
எளிமையாய்
தன்திருப்தியாய்
முடிந்த
கொஞ்ச நேரத்தில்

செய்த பணியில்
குறைபாடு

பணியில்
முன்னுரிமையில்
தவறு செய்கிறாய்

வேறு பணிகள்
செய்யவில்லை

இந்த பணியை
ஏன் உடனடியாய்
முடிக்கவில்லை

என அடுக்கு அடுக்காய்
குற்றப்பத்திரிகை
வாசித்தால்

தன் மன நிறைவில்
கிடைத்த நம்பிக்கை
இருந்த இடம்
இல்லாமால்
போய்விடும்

## நான் அவன் இல்லை

நேற்று
செயலின்
முக்கியத்துவம்
உணர்ந்து
கவனக்குவிப்பு
கொடுத்து
உழைப்பையும்
சேர்த்து
அதை மட்டும் முடித்து விடு

அவ்வளவு தான்
என்றாய்

இன்று முடிந்தவுடன்
சரி சரி அதெல்லாம்
இருக்கட்டும்
அடுத்து அடுத்து
நிறைய பணிகள் உள்ளது
ஆரம்பி என்கிறாயே
என புத்தியின்
கேள்விக்கு

மனதின்
பதிலாய்
நான் அவன் இல்லை

## வார்த்தை ஒன்று தான்

உறவின் நட்பின்
சந்திப்பில்
நல விசாரிப்புக்கு பின்
'அப்புறம்'

சுவராஸ்யமானதை
விவரிக்கையில்
முடிவை அறியும்
ஆர்வத்தில்
கேட்பவர்
'அப்புறம்'

எதிர்பாரா
நடக்கக்கூடாத
நடந்தவை
கேட்ட பின்
'அப்புறம்'

பேசிக்கொண்டிருக்கையில்
அடுத்த பணிக்காய்
அவசரமாய் செல்ல
வேண்டியதான
சூழலில்
எதிர் மனிதரை
நோக்கி
'அப்புறம்'

## நான் அவன் இல்லை

நேற்று
செயலின்
முக்கியத்துவம்
உணர்ந்து
கவனக்குவிப்பு
கொடுத்து
உழைப்பையும்
சேர்த்து
அதை மட்டும் முடித்து விடு
அவ்வளவு தான்
என்றாய்

இன்று முடிந்தவுடன்
சரி சரி அதெல்லாம்
இருக்கட்டும்
அடுத்து அடுத்து
நிறைய பணிகள் உள்ளது
ஆரம்பி என்கிறாயே
என புத்தியின்
கேள்விக்கு

மனதின்
பதிலாய்

நான் அவன் இல்லை

## அந்த நேரத்தில்...

விமர்சனங்களும்
குறை கூறும் சம்பவங்களும்
நம் மீது பாயும் தருணத்தில்

வெற்றி பெற்ற தருணங்களையும்
சாதித்த நினைவுகளையும்
அசை போட்டு
மாற்றி யோசித்தால்

குறைந்த பட்சம்
தன்னம்பிக்கையாவது
காப்பற்றப்படும்...

## அந்த நிலை வரும் வரையில்...

செல்வ சேமிப்பில்
போக வேண்டிய
தூரம் இருப்பினும்
கிடைத்தவற்றில் சந்தோஷமமும்
நாளையவற்றில்
நம்பிக்கை

முடிக்க வேண்டிய
பணிக்கு
நிறைய பயணம்
செய்ய வேண்டிய
இருப்பினும்
முடிந்தவற்றில்
தன் மனநிறைவும்
செய்ய வேண்டியவற்றில்
ஆர்வம்

கஷ்டங்கள் தீர
பல நிலை கடக்க
வேண்டியவை இருப்பினும்
தீர்ந்த சிரமத்திற்கு
நிம்மதியும்
பாக்கி உள்ளவை
தீர செயல்பாடு

அந்த நிலை வரும்
வரையில்

மனதுக்குள்
தொண தொணப்பு
இருந்து கொண்டே
தான் இருக்கும்

## ஞாபக சேமிப்பிலிருந்து...

சிறு வயதில்
பொழுது போக்குக்கு
திரைப்படமே
பெரும் பங்கு வகித்த
நாட்களில்

படம் பார்ப்பதற்கு
முன்பு அதை பற்றிய
கற்பனை

நண்பர்களுடன்
சேர்ந்து சென்ற
மகிழ்ச்சி

திரையரங்கில்
ஏற்கனவே உள்ள
நண்பர்களுடன்
சேர்ந்து கொண்ட
பிற நண்பர்களுடன்
அரட்டை

கொஞ்சம் வளர்ந்த பின்
புத்தி யோசிக்க ஆரம்பித்த பின்
திரை காட்சிகளுக்கான
வசனத்தை முன் கூட்டி
சொல்லி
நம்மை நாமே
சபாஷ் சொல்லிக்கொண்ட
தருணங்கள்

அடுத்த கட்டமாய்
தர்க்க ரீதியாய்
காட்சிகள் கோர்வையாய்
வரவில்லை
வசனத்தில் இன்னும்
வலு சேர்த்திருக்கலாம்
முடிவு வேறு விதமாய்
இருத்திருக்கலாம்
என திரை விமர்சனகாய்

அது ஒரு சந்தை
அங்கு உள்ள தேவைக்கு
தான் தயாரிப்பு
அதற்குத்தான் வியாபாரம்
என்பது புரியாமல்

பின் ஒரு கட்டத்தில்
மனததோடு ஒட்டா
படம் எனில்
பாதிலியே
திரையரங்கம் விட்டு
வெளியேறல்

தற்போது
இரண்டு மணி நேரம்
பார்க்க பொறுமை
இல்லாமை
இணைய வழி
பொழுது போக்கு
என்று ஆகி விட்டதால்
திரைப்படம்
பார்த்தே
பல ஆண்டுகள்
ஆகி விட்டது

--

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



## ரகசியக் கூடு

தயங்கி தயங்கி பேசியது தெரியும்
என்ன பிடிக்கும்
இல்ல... பொதுவா
என்று வழிந்தது தெரியும்
காலமற்ற காதலுக்குள் சூடாகி
வியர்வை சிந்தியது தெரியும்
முத்தங்களால் கசிந்துருகிய
கனவுகள் தெரியும்
புது வருடம் பிறந்த நாள்
பொங்கல் தீபாவளி
என்று வாழ்த்துகளை
கடிதங்களாக்கியது தெரியும்
சொன்ன முதல் பொய் தெரியும்
சொல்லத் துவங்கி பின்
மாற்றிய மறைத்தல் தெரியும்
அப்ப என்ன சந்தேகப் படற...
எனக் கேட்ட
முதல் சண்டையிலிருந்து
இனி முகத்துலயே முழிக்காத
என்று பிரிந்தது வரை
எல்லாம் தெரியும்
இந்த அலைபேசிக்கு
நம் இல்லாமையும் தெரியும்...!

## நேர் எதிர்

தோல்வியை
நுணுக்கி நுணுக்கி பேச
வெறுமையை
வெற்றிலையாக மெல்ல
ஏமாற்றத்தை
எகிறி எகிறி பிடிக்க
துயரத்தை
தோளுக்கேற்றி தவிக்க
சிரித்தபடியே அழ
வெறித்தபடியே திரிய
போதாமைப் படியில்
உருண்டபடியே விழ
முக்கியமாக
காதலின் தோல்வியை
கட்டிக்கொண்டே உழல
ஒன்றுக்கும் வாய்க்கவில்லை
அத்தனைக்கும்
நேர் எதிராக இவ்வாழ்வு

## ஒரு நாள் போதுமா

துணி துவைக்க வேண்டும்
தலைவர் படம் பார்க்க வேண்டும்
சிக்கன் சமைத்தால் நன்றாக
இருக்கும்
பைக் கழுவுதல் பளீர் புத்துணர்வு
நகம் வெட்டுதல் நலம்
இளையராஜா பாட்டு
கூடவே
அவளுடனான சண்டையை
சரி செய்தல்
கொஞ்சம் எழுதி விட்டு
படித்தால் சுகம்
வீடு பெருக்குதல்
சுத்தம் சுகாதாரம்
நிதானமாக குளித்தல் நிம்மதி
மதுவின் மயக்கம்
துள்ளும் இளமை
எல்லாவற்றையும் செய்ய
முதலில் எழுந்திருக்க வேண்டும்
இப்போதே மணி பத்துக்கு மேல்
ஞாயிறு என்பது யாதெனில்.....!

- கவிஜி

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.